# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.NO.34/2019 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | பி.சா- 01 (DW-01 ) |
| பெயர் | :- | சண்முகசுந்தரம் த/பெ. அங்கமுத்து |
| தேதி | :- | 21-07-2026 |

சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.

**குறுக்குவிசாரணை**

எதிர்வழக்குரை தயார் செய்வதற்கு தேவையான விவரங்களை நான்தான் சொன்னேன். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். எதிர்வழக்குரையிலும் முதல்விசாரணைக்கான நிரூபண ஆணையுறுதிலும் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். எனது முதல்விசாரணை நிரூபண ஆணையுறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில்தான் நான் வசிக்கிறேன் என்றால் சரிதான். கதவு எண் 9/6 என்றால் சரிதான்.

உத்தண்ட முதலியாரின் மகன்கள் அங்கமுத்து, மாணிக்கம், தனபால் மகள்கள் நீலாம்பாள், சுசீலா, இந்திராணி ஆகியோர் ஆவர். இந்திராணி இறந்துவிட்டார். இந்திராணி சிறு வயதிலேயே இறந்துவிட்டார் என்று கேள்விப்பட்டியிருக்கிறேன். இந்திராணி பற்றி எதிர்வழக்குரையிலும் முதல்-விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான்

உத்தண்ட முதலியார் எப்போது இறந்தார் என்றால் 2001-ஆம் ஆண்டு. தனபாலும் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 2021-ஆம் ஆண்டு

என்று நினைக்கிறேன். தனபாலுடைய மனைவி சுபத்தரா என்றும் மகள்கள் கவிதா, திலகா என்றும் சொன்னால் சரிதான். என்னுடைய தகப்பனார் அங்கமுத்து 2018-ஆம் ஆண்டு இறந்தார். அவருடைய மனைவி ருக்மணி 2017-ஆம் ஆண்டு இறந்துவிட்டார். அவர்கள் இருவருக்கும் நான், சங்கர் ஆகிய இருமகன்கள் மட்டும் பிள்ளைகள்.

நீலாம்பாளும் சுசீலாவும் 1975-ஆம் ஆண்டிற்குமுன்பே திருமணம் செய்துகொடுக்கப்பட்டுவிட்டார்கள் என்றால் அது எனக்குத் தெரியவில்லை. எப்போது திருமணம் நடந்தது என்றால் எனக்குத் தெரியவில்லை. 1975-ஆம் ஆண்டிற்குமுன்பே திருமணம் ஆகிவிட்டது என்று தெரிந் -திருந்தும் இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

வழக்கு 05-ஆம் இன சொத்து உத்தண்ட முதலியார் உயிரோடு இருந்த -போதே 1971-ஆம் ஆண்டே வாதி தரப்பு 02-ஆம் சான்றாவணம் மூலம் அங்கமுத்து, மாணிக்கம், தனபால் ஆகியோருடன் பாகப்பிரிவினை செய்து -கொண்டார் என்றால் பாகப்பிரிவினை செய்துகொடுத்தார். உத்தண்ட முதலியார் வாதி தரப்பு 01-ஆம் சான்றாவணம் மூலம் கிரயம் வாங்கிய சொத்தை பாகப்பிரிவினை செய்துகொடுத்தார் என்றால் சரிதான். 1971-ஆம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தில் யார் யாருக்கு எவ்வளவு சொத்து ஒதுக்கப்பட்டது என்று எனக்குத் தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. பத்திரத்தை பார்த்தால் சொல்ல முடியும். மேற்சொன்ன பாகப்பிரிவினையில் என் தகப்பனாருக்கு ஒதுங்கிய A அட்டவணை சொத்தை என் தகப்பனாரும் அவருக்குபிறகு நானும் தனித்து சுவாதீனத்தில் இருந்து வந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால்தான் அந்த சொத்தின் பரப்பளவோ புல எண்ணோ எனக்குத் தெரியவில்லை என்று சொன்னால்

சரியல்ல. இந்த வழக்கில் தற்காலிக தடையுறுத்துக் கட்டளை கோரி வழக்கிடை விண்ணப்ப எண் 05/2023 -ஐ தாக்கல்செய்தேன் என்றால் சரிதான். நீதிமன்றம் தன்னிச்சையாக நீதிமன்ற ஆணையரை நியமித்து ஆணையிட்டது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் வரைபடத்துடன் அறிக்கை தாக்கல்செய்தார் என்றால் சரிதான். வரைபடத்தில் 02 கிணறுகளை குறிப்பிட்டியிருக்கிறார் என்றால் சரிதான். அந்த இரு கிணறுகளில் ஒரு கிணறுக்கான மின் இணைப்பு எண் 635 தனபால் பெயரிலும் மின் இணைப்பு எண் 638 மாணிக்கம் பெயரிலும் உள்ளன என்றால் சரிதான். பரிவர்த்தனை நடந்தபிறகு பாகப்பிரிவினை நடக்காததால் அவர்கள் பெயரில் உள்ளது. 1985-ஆம் ஆண்டு பரிவர்த்தனை செய்துகொண்டனர் என்றால் சரிதான். தடையுறுத்து கட்டளை கோரிய வழக்கிடை விண்ணப்பத்தில் கண்ணடுள்ள சொத்து முழுக்க நீதிமன்ற ஆணையரின் வரைபடத்தில் உள்ளதா என்றால் ஒரு சொத்து விடுப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையரின் வரைபடத்தில் என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்து எது என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் முடியும். வரைபடத்தில் தென்பகுதி. அந்த தெற்குபகுதியில் விநாயகா நூற்பாலை உள்ளது என்றால் தென்பகுதியில் கிழக்கு பக்கம் உள்ளது. நீதிமன்ற ஆணையரின் வரைபடத்தில் நூற்பு ஆலையின் படம் உள்ளது என்றால் சரிதான்.

விநாயகா நூற்பு ஆலையில் நான், உத்தண்ட முதலியார், அங்கமுத்து, மாணிக்கம், தனபால் ஆகிய ஆறுவரும் கூட்டாளிகளாக இருந்தோம் என்றால் சரிதான். கூட்டாண்மை பின்னிட்டு கலைந்துவிட்டது என்றால் சரிதான். அங்கமுத்து, மாணிக்கம், தனபால் ஆகிய மூவரும் விலகி

-விட்டனர். நான் பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தனபால், மாணிக்கம், அங்கமுத்து மூவரும் தனிதனியாக சொத்துக்கள் வாங்கியுள்ளனர் என்றால் சரிதான். கூட்டு வருமானத்தில் இருந்து அந்த சொத்துக்கள் வாங்கப்பட்டன. அந்த கிரய ஆவணங்கள் வாதி தரப்பு 03, 04, 05, 06 என்று சொன்னால் சரிதான். வேறு சொத்தும் கிரயம் வாங்கப் -பட்டுள்ளது. நான் சொல்லும் சொத்து பிரதிவாதி தரப்பு 01-ஆம் சான்றாவணத்தில் கண்ட சொத்தா என்றால் ஆமாம். அதில் 1525 சதுரடி நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பிரதிவாதி தரப்பு 01-ஆம் சான்றாவணம் 25.06.1987-ஆம் தேதியன்று ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் தனபால் சொந்த பணத்தை கொண்டு வாங்கியதாக வாசகம் உள்ளது என்றால் சரியல்ல. நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

1971-ஆம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்களும் 1984-ஆம் ஆண்டு வாதி தரப்பு 03, 04, 05, 06 -ஆம் ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்களும் மற்றும் ராமலிங்கம் என்பவருக்கும் கந்தப்பக் கவுண்டர் என்பவருக்கும் சொந்தமான கிரய சொத்துக்களும் சேர்க்கப்பட்டு பரிவர்த்தனை பத்திரம் ஒன்று 27.03.1985-ஆம் தேதியன்று ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணம் வாதி தரப்பு 07-ஆம் சான்றாவணம் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் அங்கமுத்து, மாணிக்கம், தனபால், ராமலிங்கம், கந்தப்பக கவுண்டர் ஆகியோர் தரப்பினர் என்றால் சரிதான்.

அங்கமுத்து, மாணிக்கம், தனபால் ஆகியோரின் சொத்துக்களும் ராமலிங்கம், கந்தப்பக் கவுண்டர் ஆகியோரின் சொத்துக்களும் இடையே இடையே கலந்து இருந்ததால் இரு தரப்பினரும் சொத்தை வசதியாக ஒருபக்கமாக ஒதுக்கி அனுபோகம் செய்வதற்காக அந்த பரிவர்த்தனை நடந்தது என்றால் சரிதான். பரிவர்த்தனை பத்திரம் மூலம் அங்கமுத்து, தனபால், மாணிக்கம் தரப்பினருக்கு சொந்தமான எவ்வளவு சொத்து ராமலிங்கம், கந்தப்பக் கவுண்டருக்கு சொந்தமானது எவ்வளவு சொத்து என்று பத்திரத்தை பார்த்தால் தெரியும். அங்கமுத்துவிடமிருந்து எவ்வளவு சொத்து சென்றது மாணிக்கமிடமிருந்து எவ்வளவு சொத்து சென்றது தனபாலிடமிருந்து எவ்வளவு சொத்து சென்றது என்று வாதி தரப்பு 07-ஆம் சான்றாவணத்தில் குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொல்வதுபோன்று பரிவர்த்தனை பத்திரத்தில் குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

பரிவர்த்தனை பத்திரத்தில் இராமலிங்கம், கந்தப்பக் கவுண்டர் ஆகிய இருவரும் கொடுத்த சொத்தில் அங்கமுத்து, மாணிக்கம், தனபால் ஆகிய மூவருக்கும் தலைக்கு எவ்வளவு சொத்து செல்ல வேண்டும் என்று குறிப்பாக எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பரிவர்த்தனையில் கொடுக்கப்பட்ட சொத்து முழுக்க என் தகப்பனார் அங்கமுத்துவின் சொத்து என்பதால் அவர்கள் கொடுத்த சொத்து முழுக்க அங்கமுத்துவிற்கே சொந்தம். நான் இந்த வழக்கிற்காக அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

வாதி தரப்பு 08-ஆம் சான்றாவணமான நகர நில அளவை பதிவேட்டில் நகர புல எண்கள் 361/1A, 361/2D, 361/3A, 361/4D, 361/9C

ஆகியவற்றில் அடங்கிய இடங்கள் சம்மந்தமாக அங்கமுத்து, மாணிக்கம், தனபால் ஆகிய மூவர் பெயரும் பதிவாகியுள்ளது என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. வழக்குச் சொத்து நகராட்சியில் இணைப்பதற்குமுன் இருந்த பட்டாவிலும் மேற்சொன்ன மூவர் பெயரும் உள்ளது என்றால் தாத்தா பிரித்துக்கொடுத்த சொத்திற்கு மட்டும் அவ்வாறு உள்ளது. தாத்தா பிரித்துக்கொடுத்த சொத்திலும் கூட்டு சுவாதீனத்தில்தான் உள்ளது என்றால் இல்லை. வாதி தரப்பு 11-ஆம் சான்றாவணமான விருப்பாவணம் பற்றி எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. அந்த ஆவணத்தில் கண்டுள்ள சொத்து வழக்கு 07-ஆம் இன சொத்தாக உள்ளது என்றால் அது எனக்குத் தெரியவில்லை.

வாதி தரப்பு 07-ஆம் சான்றாவணமான உத்தண்ட முதலியாரின் விருப்பாவணத்தில் முதல் சான்றொப்ப சான்றாளராக சண்முக சுந்தரம் தந்தை பெயர் U.அங்கமுத்து கதவு எண் 9, தியாகி நடேசன் தெரு 3, அம்மாபேட்டை, சேலம் - 3 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது பொய் ஆவணம். இந்த ஆவணத்தில் உள்ள கைரேகை உத்தண்ட முதலியாருடையது என்று சொன்னால் எனக்கு அது தெரியாது. அந்த ஆவணம் சேலம் கிழக்கு 01-ஆம் இணை சார்பதிவகத்தில் பதிவு -செய்யப்பட்டது என்றால் அது எனக்குத் தெரியாது. அந்த விருப்பாவணத்தில் பதிவுசெய்ய அடையாளம் காட்டிய நபர்கள் என்ற இடத்தில் என் பெயரும் முகவரியும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இருக்கலாம். ஆனால் நான் செல்லவில்லை. கோபால் என்பவர் பெயர் 02-ஆம் சான்றொப்பமாக உள்ளது என்றால் சரிதான். அவர் யார் என்று எனக்குத் தெரியாது. அவர் இறந்துவிட்டார் என்றால் அது எனக்குத்

தெரியாது. சான்றொப்பம் சான்றாளராக தற்போது இருப்பது நான் மட்டுமே என்றும் நான் வேண்டுமென்றே அந்த விருப்பாவணத்தை மறுக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த விருப்பாவணத்தின் அசல் என்னிடம் -தான் உள்ளது என்றும் அதை அறிவிப்பு கொடுத்தும் வேண்டும் என்றே தாக்கல்செய்ய மறுக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. விருப்பாவணத்தில் சான்றொப்பமும் அடையாளம் காட்டும் சான்றொப்ப -மும் நான் தான் போட்டேன் என்றும் இந்த வழக்கிற்காக அந்த விவரம் தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சொத்துக்கள் அனைத்தும் கூட்டாக இருப்பதால்தான் தனிப்பட்ட முறையில் என் தகப்பனார் பெயரிலோ என் பெயரிலோ தனிபட்டா வாங்கவில்லை என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தை தனிப்பட்ட முறையில் கையாள எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் தெற்கு பக்கம் நூற்பு ஆலை கட்டடமும் அதற்குமுன் இருக்கும் இடங்களும் தனபாலுக்கும் மாணிக்கத்திற்கும் சொந்தமானவை என்றால் சரியல்ல. அந்த சொத்து வாதி தரப்பு 03, 04-ஆம் ஆவணங்களின்படி அவர்களுக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. வழக்குச் சொத்துக்கள் அனைத்தும் ஒரு வேலிக்குள் உள்ளன என்றால் சரியல்ல. சுற்றுச்சுவருக்கு வெளியிலும் சொத்துக்கள் உள்ளன. பெரும்பாலான சொத்துக்கள் சுற்றுச்சுவருக்கு உள்ளே உள்ளன என்றால் அவை யாவும் என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டவை. நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் அங்கமுத்துவிற்கு கிரயப்படி சொந்தமான தனிச் சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். பரிவர்த்தனைக்குமுன் வாங்கப்பட்டவை. பரிவர்த்தனைக்குமுன் கூட்டு

வருமானத்தில் இருந்து வாங்கப்பட்டதா என்றால் இல்லை. பரிவர்த்தனைக்கு பிறகு எனது தகப்பனாரும் அவரது சகோதரர்களும் தனிதனியாக சம்பாதித்து தனிதனியாக குடும்பம் நடத்தினர் என்றால் சரியல்ல. 1988-ஆம் ஆண்டிற்கு பிறகுதான் தனிதனியாக சென்றனர். நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

வழக்குச் சொத்துக்களை அங்கமுத்து வகையறா தனபால் வகையறா மாணிக்கம் ஆகியோர் கூட்டாக அனுபோகம் செய்து வருகிறோம் என்றும் வழக்குச் சொத்துக்களில் உள்ள ஆதாயங்களை கூட்டாக அனுபோகம் செய்கிறோம் என்றால் சரியல்ல. நாங்கள் தனிப்பட்ட முறையில் சுவாதீனத்தில் இருப்பதாக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2018-ஆம் ஆண்டு எனது தகப்பனார் இறக்கும்வரை பிரச்சனை இல்லை என்றும் அதன்பிறகு நான் பிரச்சனை செய்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்குச் சொத்தில் பாகப்பிரிவினை பெற வாதிகளுக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.